(முற்பகல் 9-30)

Workshop on soil testing.

* 655 Q.—Thiru R. R. MUNUSAMI: Will the Hon. the Minister for Agriculture be pleased to state:

(a) whether any Regional Workshop on Soil Testing, Fertiliser Quality Control and Fertiliser Promotion was held at Madras around the 9th July, 1973; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: (அ) & (இ) மத்திய அரசினர் நடத்திய இந்தக் கருத்தரங்கில் தென் மாநிலங்களைச் சேர்ந்த 120 பிரதி நிதிகள் கலந்து கொண்டனர். ரசாயன உரம் மற்றும் கரிம உரம், அதாவது ஆர்கானிக் உரம் உற்பத்தி, வினியோகம் பற்றி ஆராயப்பட்டது.

திரு. ஆ. பரந்தாமன்: ஆங்கிலத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற இந்தக் கேள்வித் தாளில்

(a) whether any Regional Workshop on Soil Testing, Fertiliser Quality Control and Fertiliser Promotion was held at Madras around the 9th July 1973; and

(b) if so, the deails thereof?

என்று இருக்கிறது. ஆனுல் தமிழில் கொடுக்கப்பட்டிருக்கிற கேள்வித் தாளில் "சென்னையில் 1973 ஜூலை 9-ஆம் நாள் அளவில், மண்வள ஆராய்ச்சி, உர தரக்கட்டுப்பாடு, உரங்கள் பயன்படுத்துவதைப் பெருக்குதல் குறித்த வட்டார கருத்தரங்கு நடைபெற்றதா?" என்று இருக்கிறது. ஆகவே இது ரீஜனல் வொர்க்ஷாப்பா அல்லது ரீஜனல் செமினுரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: வொர்க்ஷாப் என்பதும் செமினர் என்பதும் ஒரே கருத்தைத் தான் குறிக்கும்.

கன்னியாகுமரியில் தென்னை சாகுபடி

* 656 **வினு—திரு. என். டென்னிஸ்:** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில், தென்னை முனைப்புச் சாகுபடித் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையில் உள்ளதா?